# தட்சிணாமூர்த்தி ஸ்தோத்ரம்!



ப்ரக்ஞன்

# தட்சிணாமூர்த்தி ஸ்தோத்ரம்

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)

தெளிவுரை

**ப்ரக்ஞன்**

# தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரம்

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)

**(தெளிவுரை: - ப்ரக்ஞன்)**

ॐ मौनव्याख्या प्रकटितपरब्रह्मतत्त्वं युवानं
वर्षिष्ठान्तेवसदृषिगणैरावृतं ब्रह्मनिष्ठैः ।
आचार्येन्द्रं करकलित चिन्मुद्रमानन्दमूर्तिं
स्वात्मारामं मुदितवदनं दक्षिणामूर्तिमीडे ॥

Om mauna-vyākhyā prakaṭita-para-brahma-tattvaṁ yuvānam
varṣiṣṭhāntevasad ṛṣi-gaṇair āvṛtaṁ brahma-niṣṭhaiḥ |
ācāryendraṁ kara-kalita cin-mudram ānanda-mūrtiṁ
svātma-rāmaṁ mudita-vadanaṁ dakṣiṇāmūrtim īḍe ||

ஓம் மௌனவ்யாக்யா பிரகடித பரப்ரஹ்ம தத்த்வம் யுவானம்
வர்ஷிஷ்டாந்தேவசத்  ஷிகணைராவ்ருதம் ப்ரஹ்மநிஷ்டை:
ஆசார்யேந்திரம் கரகலித சின்முத்ரம் ஆனந்தமூர்த்திம்
ஸ்வாத்மாராமம் முதிதவதனம் தக்ஷிணாமூர்த்திமீடே

**சொற்பொருள் (பதப்பிரிப்பு)**

மௌன–வ்யாக்யா = மௌனமாக விளக்குவது

பரப்ரஹ்ம தத்த்வம் = பரப்ரஹ்மத்தின் உண்மை

ப்ரகடிதம் = வெளிப்படுத்துபவர்

யுவானம் = இளம் வயதானவர்

வர்ஷிஷ்ட = முதியவர்கள்

ரிஷி கணை: = முனிவர்கள் கூட்டம்

ப்ரஹ்ம நிஷ்டை: = பிரஹ்மத்தில் நிலைபெற்றவர்கள்

ஆசார்யேந்திரம் = குருக்களில் முதன்மையானவர்

சின்முத்ரம் = ஞான முத்திரை

ஆனந்த மூர்த்தி = ஆனந்த வடிவம்

ஸ்வாத்மாராமம் = தன்னுள் ஆனந்தம் கொண்டவர்

முதித வதனம் = புன்னகையுடன்

ஈடே = நான் புகழ்கிறேன்

**ஸ்லோகத்தின் விளக்கம்**

இங்கு **"மௌன உபதேசம்"**. அதாவது, தட்சிணாமூர்த்தி பேசவில்லை.

ஏன்? அவர் பேசவில்லை.

உண்மை என்பதை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அது, அவரவர்கள் உணர வேண்டிய அனுபவம்.

அதனால், மௌனம் மட்டுமே மிக உயரிய உச்ச உபதேசம்.

**"இளமையான குரு – முதியவர்களான சீடர்கள்"**. இது ஒரு மிகப் பெரிய அடையாளச் சின்னம். இதன் பொருள், மனிதன் வளர்ந்தால் மட்டும் ஞானம் வராது. ஞானம் என்பது உடலில் இல்லை. உணர்வில் இருக்கிறது. அதனால், ஆள் வளர்வதுப் போல, அவனது உள்ளமும் வளர வேண்டும்.

அதாவது, உயரிய விசயங்களை மனம் உள்வாங்க வேண்டும். அப்போது மட்டுமே ஞானம் கைகூடும்.

ஞானம் என்பது, ஆத்ம அனுபவம். அதனால், அவரது கையில் **"சின்முத்திரை"** காட்டப்பட்டுள்ளது. இங்கு, தக்ஷிணாமூர்த்தி சின் முத்திரை காட்டுவதின் உண்மையான நோக்கம் இந்த பிரபஞ்சம் எனும் ஒட்டுமொத்த பூஜ்ஜியத்துக்குள் என் ராஜ்ஜியம் இருக்கு! ஆனால், அதற்கான ஆதாரம் அறிவு என்பதினால், அதை தெரிந்துக் கொள்ள **விழிப்பு, கனவு** மற்றும் **ஆழ் உறக்கம்** என்ற மூன்று அவஸ்தைகளிலும் **"சுத்த சாக்ஷி"** மாறாமல் இருப்பதை உணர்வதே **"ஆத்ம ஞானம்"** என்று கூறுகிறது.

இறைவன் "ஆனந்த மூர்த்தி". அத்தகைய ஆனந்தம் வெளியில் இல்லை. அது உன்னுள் உணர்வு மயமாய் உள்ளது. ஆகவே, இன்பத்தை வெளியில் தேடாதே! தன்னுள் நிறைவடைய வேண்டும். அதுவே, உண்மையான ஆனந்தம்.

இதற்கு, வாய் வார்த்தைகள் தேவையில்லை. சிந்தனைகள் எதுவும் தேவையில்லை. சும்மா இருந்தாலேயே சுயம் உணர முடியும்.

ஆகவே, மௌனம் = **உபதேசம்**

அதை உபதேசிக்கும் குரு = **சித்தம்**

அதனால் உண்டான ஞானம் = **அனுபவம்**

அனுபவம் என்ன? = **நீயே பரப்ரஹ்மம்.**

वटविटपिसमीपे भूमिभागे निषण्णं
सकलमुनिजनानां ज्ञानदातारमारात् ।
त्रिभुवनगुरुमीशं दक्षिणामूर्तिदेवं
जननमरणदुःखच्छेद दक्षं नमामि ॥

Vaṭa–viṭapi–samīpe bhūmi–bhāge niṣaṇṇam
sakala–muni–janānāṁ jñāna–dātāram ārāt |
tri–bhuvana–gurum īśaṁ dakṣiṇāmūrti–devam
janana–maraṇa–duḥkha–cheda–dakṣaṁ namāmi ||

வட விடபி சமீபே பூமி பாகே நிஷண்ணம்
சகல முனி ஜனானாம் ஞான தாதாரம் ஆராத்
த்ரிபுவன குரும் ஈசம் தக்ஷிணாமூர்த்தி தேவம்
ஜனன மரண துக்கச்சேத தக்ஷும் நமாமி

**சொற்பொருள் (பதப்பிரிப்பு)**

வட = ஆலமரம்

விடபி = கிளைகள்

சமீபே = அருகில்

பூமி பாகே = தரையில்

நிஷண்ணம் = அமர்ந்திருக்கும்

சகல = எல்லா

முனி ஜனானாம் = முனிவர்களுக்கு

ஞான தாதாரம் = ஞானத்தை தருபவர்

ஆராத் = அருகில்

த்ரிபுவன குரும் = மூன்று உலகங்களின் குரு

ஈசம் = ஈஸ்வரன்

தக்ஷிணாமூர்த்தி தேவம் = தட்சிணாமூர்த்தி

ஜனன = பிறப்பு

மரண = மரணம்

துக்க = துன்பம்

ச்சேத = நீக்கும்

தக்ஷம் = திறமை வாய்ந்தவர்

நமாமி = நான் வணங்குகிறேன்

## ஸ்லோகத்தின் விளக்கம்

இந்த ஸ்லோகம் வெளிப்படையாக ஒரு குரு வடிவத்தை வர்ணிக்கிறது. ஆனால் அதன் உள்ளார்ந்த அர்த்தம் மிகவும் ஆழமானது.

**"ஆலமரத்தின் கீழ் அமர்ந்திருக்கும் குரு"**.

இது ஒரு வெளிப்புற காட்சி மட்டுமல்ல. ஒரு ஆலமரத்தின் விதை எப்படி பார்வைக்கு மிக நுண்ணிய கடுகு அளவில் இருந்தபோது, **அதன் 'அவ்யக்த நிலை'** (வெளிப்படாத நிலை) அசையாத ஜடம் போல, அது இன்னது என்று அறிய முடியாத ஒடுங்கிய நிலை. ஆனால், அதே விதை வியக்தமாகும் போது, (வெளிப்படும் போது) அதன் துளிர், தண்டு, கிளைகள், இலைகள், பூக்கள், காய்கள், கனிகள் மற்றும் அந்த கனிக்குள் அதே விதைகள்.

இதுப்போல, உன் சுய அறிவு அசையாத உள்ளுணர்வு. ஆனால், அது மனமாக வெளிப்படும் போது, இந்த பிரம்மாண்ட பிரபஞ்சம் (சூரியன், சந்திரன் போன்ற கோள்கள், பூமி, பூமியில் பல சீவராசிகள் என படைப்பு விரிகின்றது) உருவாகிறது.

அதாவது, பிரம்மாண்ட ஆலமரத்திற்கு ஆதாரமாக அந்த **'விதை'** இருப்பதுப் போல, இந்த பிரம்மாண்ட பிரபஞ்சத்திற்கு ஆதாரமாக அந்த **"அறிவு"** இருக்கிறது.

அதுவே, **"ஆலமரம்"** இருப்பதைக் காட்டும் கருத்து. ஆகவே, நிலையான சத்தியம் என்பது ஆத்ம தத்துவம் மட்டுமே என்பதை உள்ளுணர்வில்

வெளிப்படும் சுத்த சித்தம் உணர்ந்தால், அதுவே, உண்மையான குரு என்பதை இங்கு பார்க்க வேண்டும்.

உண்மையில், குரு வெளியில் இல்லை. அவர் உள்ளே இருக்கும் சுத்த சித்தம் (சாக்ஷி).

அதுவே, "**அனைத்தையும் அறியும் அறிவு!**".

மூன்று உலகங்களை அறியும் வெளிச்சம். (மூன்று விரல்கள்)

**"மூன்று உலகங்களின் குரு"**

- ✓ ஜாக்ரத் (விழிப்பு)
- ✓ ஸ்வப்ன (கனவு)
- ✓ சுஷுப்தி (தூக்கம்)

இந்த மூன்றுக்கும் சாட்சி யார்?

நீயே! – அதனால், நீயே குரு. நீயே ஈஸ்வரன்.

இந்த ஞானம் வந்தவுடன், "**பிறப்பு–இறப்பு**" எனும் சம்ஸ்சார துன்பத்தை நீக்க முடியும்"

பிறப்பு–இறப்பு எதற்காக வருகிறது?

"நான் உடல்" என்ற தவறான அடையாளம். அதுவே, இந்த ஆத்ம ஞானம் வந்தால், உடல் நான் அல்ல! மனம் நான் அல்ல! என்பது புரியும். அதன் பிறகு, சம்ஸாரம் நீங்கும்.

**தட்சிணாமூர்த்தி** = வெளியில் இருக்கும் தேவன் அல்ல. அவர் உள்ளே இருக்கும் சுத்த சித்தம் (ஆத்மா).

चित्रं वटतरोर्मूले वृद्धाः शिष्याः गुरुर्युवा ।
गुरोस्तु मौनव्याख्यानं शिष्यास्तुच्छिन्नसंशयाः ॥

Citraṁ vaṭa–taror–mūle vṛddhāḥ śiṣyāḥ gurur yuvā |
gurostu mauna–vyākhyānaṁ śiṣyās tu chinna–saṁśayāḥ ‖

சித்ரம் வடதரோர் மூலே வ்ருத்தா: சிஷ்யா: குருர் யுவா
குரோஸ்து மௌன வ்யாக்யானம் சிஷ்யாஸ்து சின்ன சம்ஸயா:

**சொற்பொருள் (பதப்பிரிப்பு)**

சித்ரம் = ஆச்சரியம் / விசித்திரம்

வட தரோ: மூலம் = ஆலமரத்தின் கீழ்

வ்ருத்தா: = முதியவர்கள்

சிஷ்யா: = சீடர்கள்

குரு: யுவா = குரு இளமையானவர்

குரோ: து = குருவின்

மௌன வ்யாக்யானம் = மௌன உபதேசம்

சிஷ்யா: து = சீடர்கள்

சின்ன சம்ஸயா: = சந்தேகம் நீங்கியவர்கள்

## ஸ்லோகத்தின் விளக்கம்

இந்த ஸ்லோகம் முழு அத்வைதத்தின் இதயம். இங்கு "விசித்திரம்!" என்னவெனில், **சீடர்கள்** → முதியவர்கள். **குரு** → இளைஞன்.

சாதாரணமாக நடைமுறையில் குரு பெரியவர் அல்லது வயதானவராக இருப்பார். சீடர்கள் சிறியவர்களாக, வயது குறைந்தவர்களாகவே இருப்பார்கள்.

ஆனால், இங்கு அப்படியே மாறி, குரு இளமையாக இருக்கிறார். சிஷ்யர்கள் வயதானவர்களாக இருப்பதைக் காண முடிகிறது.

இதன் பொருள், "**வயது**" என்பது உடலுக்கே. ஆனால், ஆத்மாவுக்கு வயது என்பது எப்போதும் இல்லை.

அதுவே, அறிவு.

அவரே குரு. அவரே இளமை.

குரு = ஆத்மா

ஆத்மா = நித்யம் (எப்போதும் புதியது)

"**மௌன வ்யாக்யானம்**" – குரு பேசவில்லை. ஆனாலும் உபதேசம் நடக்கிறது. அறிவின் மௌனம் தான் உண்மையான உபதேசம். அதற்கு எல்லாம் தெரிந்தாலும், எதையும் வெளிப்படுத்தாது. ஆனால், மனம் கொஞ்சம் தெரிந்துக் கொண்டாலும், எல்லாம் தெரியும் என்று வெளிப்படுத்தும். இதுவே, மனதின் அஹங்காரம் ஆகும்.

குரு பேசவில்லை. – ஆனால், சீடர்கள் "சந்தேகம் நீங்கியது"

சீடர்கள் எதையும் குருவிடம் கேட்கவே இல்லை. ஆனாலும், அவர்கள் சந்தேகம் மறைந்தது.

எப்படி?

அதற்குக் காரணம், அந்த அறிவு உண்மை அனுபவமாக அவர்களுக்குத் தெரிந்தது

**குரு** = வெளியில் இல்லை

**குரு** = உள் சித்தம்

**சீடன்** = மனம்

மனம் அமைதியாகும்போது, ஆத்மா வெளிப்படும்.

அதுவே, மௌன உபதேசம்.

निधये सर्वविद्यानां भिषजे भवरोगिणाम् ।
गुरवे सर्वलोकानां दक्षिणामूर्तये नमः ॥

Nidhaye sarva-vidyānāṁ bhiṣaje bhava-rogiṇām |
gurave sarva-lokānāṁ dakṣiṇāmūrtaye namaḥ ‖

நிதயே சர்வ வித்யானாம் பிஷஜே பவ ரோகிணாம்
குரவே சர்வ லோகானாம் தக்ஷிணாமூர்த்தயே நம:

**சொற்பொருள் (பதப்பிரிப்பு)**

நிதயே = பொக்கிஷம் / ஆதாரம்

சர்வ வித்யானாம் = எல்லா அறிவுகளின்

பிஷஜே = மருத்துவர்

பவ ரோகிணாம் = பிறவி என்னும் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

குரவே = குருவாக இருப்பவருக்கு

சர்வ லோகானாம் = அனைத்து உலகங்களுக்கும்

தக்ஷிணாமூர்த்தயே = தட்சிணாமூர்த்திக்கு

நம: = வணக்கம்

## ஸ்லோகத்தின் விளக்கம்

இந்த ஸ்லோகம் மிக அழகான உவமைகளைக் கொண்டு, அருமையான அத்வைதத்தை சொல்கிறது.

அதுவே, "அனைத்து அறிவுகளின் பொக்கிஷம்" அந்த தூய அறிவு.

இதற்கான எல்லா கல்விகளும் (வேதம், சாஸ்திரம், யோகா) இறுதியில் எதை காட்டுகிறது?

ஒரே ஒன்று: அதுவே, ஆத்மா.

அதனால், தட்சிணாமூர்த்தி வடிவம், அனைத்து அறிவுகளின் மூலக்காரணம்.

## "பிறவி என்பது ஒரு நோய்"

இது மிகவும் ஆழமான கருத்து. சாதாரணமாக நாம் நினைப்பது, பிறப்பது நல்லது. அனைத்தையும் அனுபவிக்கலாம் என்று. ஆனால், பிறவி என்பது, மனதிற்கான வாழ்க்கை. அந்த வாழ்க்கை என்பது, ஞானத்திற்கான சாதனை.

ஆகவே, ஞானத்தின் பார்வையில், **பிறவி =** பந்தம் – துன்பம் – நோய். இதில், "குரு என்பவர், அந்த பிறவி நோயை நீக்கும் மருத்துவர்"

**நோய்** → அவித்யா (அறியாமை)

**மருந்து** → ஞானம்.

குரு என்ன செய்கிறார்?

"நீ உடல் இல்லை"

"நீ மனம் இல்லை"

"நீ பிரஹ்மம்"

இந்த உண்மையை மட்டுமே குரு என்பவர் காட்டிக் கொடுக்கிறார். அவர் கொடுக்கும் உபதேசமே மருந்து.

இந்த உபதேசம் விழிப்பு நிலையில் மட்டுமே உள்ளது. இதனை, இந்த விழிப்பு நிகழ்கால நிலையில் உள்வாங்கிக் கொண்டால், உண்மையான கால, தேசமற்ற **"விழிப்பு"** உணரப்படும்.

நோய் = "நான் உடல்"

மருந்து = "நான் பிரஹ்மம்" என்ற உபதேசம்.

நோய் போனதும், மருந்தும் தேவையில்லை.

ॐ नमः प्रणवार्थाय शुद्धज्ञानैकमूर्तये ।
निर्मलाय प्रशान्ताय दक्षिणामूर्तये नमः ॥

Om namaḥ praṇavārthāya śuddha-jñānaika-mūrtaye |
nirmalāya praśāntāya dakṣiṇāmūrtaye namaḥ ||

ஓம் நம: ப்ரணவார்த்தாய சுத்த ஞானைக மூர்த்தயே
நிர்மலாய ப்ரஷாந்தாய தக்ஷிணாமூர்த்தயே நம:

**சொற்பொருள் (பதப்பிரிப்பு)**

ஓம் = ப்ரணவம் (பரப்ரஹ்மத்தின் ஒலி வடிவம்)

நம: = வணக்கம்

ப்ரணவார்த்தாய = **"ஓம்"** என்ற மந்திரத்தின் உண்மையான அர்த்தம்

சுத்த ஞான ஏக மூர்த்தயே = தூய அறிவாக ஒரே உருவமாக இருப்பவர்

நிர்மலாய = மாசில்லாதவர்

ப்ரஷாந்தாய = பரம அமைதி

தக்ஷிணாமூர்த்தயே = தட்சிணாமூர்த்திக்கு

**ஸ்லோகத்தின் விளக்கம்**

இந்த ஸ்லோகம் மிகவும் நேராக பரப்ரஹ்மத்தை சுட்டிக் காட்டுகிறது.

**"ப்ரணவார்த்தாய"** – ஓம் என்ற மந்திரத்தின் அர்த்தம்

"ஓம்" என்பது, ஒரு சத்தம் மட்டுமல்ல.

அது,

A (அ) → விழிப்பு

U (உ) → கனவு

M (ம்) → தூக்கம்

இதற்குப் பின்னால், அனைத்திற்கும் சாட்சி (துரியம்).

அதுவே, உண்மையான தட்சிணாமூர்த்தி.

**"சுத்த ஞான ஏக மூர்த்தி"**

அறிவு இருக்கிறது. ஆனால், அது மன அறிவு அல்ல. அது, தூய அறிவு. சுத்தம். இரண்டற்றது. ஒரே ஒன்று.

அதுவே, **சித்தம் (Pure Consciousness).**

**"நிர்மலம்" – தூய்மை**

மாசு = காமம், க்ரோதம், அஹங்காரம் போன்றவைகள். இவைகள் எல்லாம் மனதுக்கே உரித்தானது. ஆனால், ஆத்மா எப்போதும் தூய்மை.

**"ப்ரஷாந்தம்"** – இது மன அமைதி அல்ல. இது என்றும், எப்போதும் அசைக்க முடியாத அமைதி. அங்கே சத்தம் இருந்தாலும் அமைதி. அங்கே சிந்தனைகள் இருந்தாலும் அமைதி.

அதுவே ஆத்ம நிலை.

"ஓம்" = உலகம் + ஆத்மா

அதன் அர்த்தம் = அது நீயே. (நீயே அந்த சுத்த சித்தம்)

இதை அறிந்தால்,

- ✓ தேடல் முடியும்
- ✓ மனம் அமைதியாகும்
- ✓ இரண்டில்லை என்ற உண்மை உணரப்படும்.

चिदोघनाय महेशाय वटमूलनिवासिने ।
सच्चिदानन्द रूपाय दक्षिणामूर्तये नमः ॥

Cid–oghānāya maheśāya vaṭa–mūla–nivāsine |
sat–cid–ānanda–rūpāya dakṣiṇāmūrtaye namaḥ ||

சிதோகனாய மகேஷாய வடமூலநிவாசினே
சச்சிதானந்த ரூபாய தக்ஷிணாமூர்த்தயே நம:

## சொற்பொருள் (பதப்பிரிப்பு)

சித் = அறிவு / சித்தம்

ஓகன = நிறைந்த திரள் / முழுமை

சிதோகன = அறிவு மட்டுமே நிறைந்தது

மகேஷாய = பரம ஈஸ்வரன்

வடமூல நிவாசினே = ஆலமரத்தின் கீழ் இருப்பவர்

ஸத் = இருப்பு (Existence)

சித் = அறிவு (Consciousness)

ஆனந்த = ஆனந்தம்

சச்சிதானந்த ரூபாய = இருப்பு–அறிவு–ஆனந்தம் எனும் ஒரே உண்மை.

தக்ஷிணாமூர்த்தயே = தட்சிணாமூர்த்திக்கு

நம: = வணக்கம்

## ஸ்லோகத்தின் விளக்கம்

இந்த ஸ்லோகம் நேராக ஆத்மாவின் இயல்பை சொல்லுகிறது.

"**சிதோகன**" – அறிவின் திரள்

ஆத்மா என்பது, ஒரு பொருள் அல்ல. ஒரு வடிவம் அல்ல.

அது, அறிவு மட்டும்.

அதாவது, அனைத்தையும் அறியும் அந்த "**அறிவுக்கு வெளியில் எதுவும் இல்லை**"

"மகேஷன்" – இது ஒரு தனி தேவனை குறிக்கவில்லை

அத்வைதத்தில், **ஈஸ்வரன் = பிரஹ்மம் = ஆத்மா**

அதனால், நீயே அந்த **"மகேஷன்"**.

**"வடமூல நிவாசி"** – ஆலமரம் கீழ் இருப்பது, ஒரு சின்னம் என ஏற்கனவே பார்த்தோம்.

அதன் அர்த்தம், நிலையான சத்தியத்தில் (ஆத்மாவில்) எப்போதும் நிலைபெற்றவர். அதாவது, "நீயே உன்னுள் நிலைத்திருப்பது" என்று பொருள்.

**"சச்சிதானந்த ரூபம்"**

**ஸத்** → நீ இருக்கிறாய் (எப்போதும்)

**சித்** → நீ அறிகிறாய்

**ஆனந்தம்** → நீ எப்போதும் ஆனந்தம்

இந்த மூன்றும் வேறல்ல. அதுவே, உன் உண்மையான இயல்பு.

பொதுவாக, நாம் தேடுவது, சந்தோஷம் – அமைதி – நிறைவு. ஆனால், அது வெளியில் கிடையாது. ஏனெனில், அந்த தேடும் பொருள் நீயே.

**நீயே சச்சிதானந்தம்.**

ईश्वरो गुरुरात्मेति मूर्तिभेदविभागिने ।
व्योमवद् व्याप्तदेहाय दक्षिणामूर्तये नमः ॥

Īśvaro gurur ātmēti mūrti–bheda–vibhāgine |
vyomavad vyāpta–dehāya dakṣiṇāmūrtaye namaḥ ||

**ஈஸ்வரோ குருராத்மேதி மூர்த்தி பேத விபாகினே**
**வ்யோமவத் வ்யாப்த தேஹாய தக்ஷிணாமூர்த்தயே நம:**

**சொற்பொருள் (பதப்பிரிப்பு)**

ஈஸ்வர: = கடவுள்

குரு: = ஆசான்

ஆத்மா = சுயம் / உண்மை நான்

இதீ = என்று

ஈஸ்வரோ குருராத்மேதி = "ஈஸ்வரன், குரு, ஆத்மா" என்று

மூர்த்தி பேத = உருவ வேறுபாடு

விபாகினே = பிரித்துக் காட்டுபவர்

வ்யோமவத் = ஆகாயம் போல

வ்யாப்த = எங்கும் நிறைந்த

தேஹாய = உடலாக இருப்பவர்

தக்ஷிணாமூர்த்தயே = தட்சிணாமூர்த்திக்கு

நம: = வணக்கம்

## ஸ்லோகத்தின் விளக்கம்

இந்த ஸ்லோகம் சொல்லவருவது என்னவெனில், **"ஈஸ்வரன் – குரு – ஆத்மா"** என்ற இந்த மூன்றும் ஒன்றே. பொதுவாக, நாம் நடைமுறையில் சாதாரணமாக நினைப்பது என்னவெனில், நான் வேறு, கடவுள் வேறு, குரு வேறு, இந்த உலகம் வேறு என எண்ணிக் கொள்கிறோம்.

கடவுள் → வேறு

குரு → வேறு

நான் → வேறு

ஆனால், இந்த ஸ்லோகம் சொல்வது, இந்த மூன்றும் ஒன்றே.

ஈஸ்வரன் = பிரபஞ்ச காரணம்

**குரு =** ஞானம் தருபவர்

**ஆத்மா** = நான்

இவைகள் வேறுபட்டது போல தோன்றும். ஆனால் உண்மையில், எல்லாம் ஒரே சித்தம்.

**"மூர்த்தி பேத விபாகினே"** – ஏன் வேறுபாடு தெரிகிறது?

அதற்குக் காரணம், மாயை.

இந்த மாயை காரணமாக,

**நான்** → ஜீவன்

**உலகம்** → வெளி

**ஈஸ்வரன்** → மேலே உள்ளார்.

இந்த அத்வைத ஞானம் வந்தால், வேறுபாடுகள் மறையும்.

## "வ்யோமவத் வ்யாப்த தேஹா"

எப்படி ஆகாயம் எங்கும், எதிலும் நிறைந்துள்ளதோ? அதுப்போல, ஆத்மா எங்கும், எதிலும் நிறைந்துள்ளது.

ஆகவே, **"நான்"** என்று சொல்லும் போது, அது உடலை குறிக்கவில்லை. அது, எல்லாவற்றையும் தாங்கும் சித்தம்.

அதுவே, ஈஸ்வரன். அதுவே, குரு. அதுவே, ஆத்மா.

மனதின் வேறுபாடுகள் = **மாயை**

சித்தம் தெளிவு = **சீவன் சிவம்** என்ற உண்மை விளங்கும்.

विश्वं दर्पणदृश्यमाननगरी तुल्यं निजान्तर्गतं
पश्यन्नात्मनि मायया बहिरिवोद्भूतं यथा निद्रया।
यः साक्षात्कुरुते प्रबोधसमये स्वात्मानमेवाद्वयं
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ १॥

Viśvaṁ darpaṇa–dṛśyamāna–nagarī tulyam nijāntargatam
paśyann ātmani māyayā bahir ivodbhūtaṁ yathā nidrayā |
yaḥ sākṣātkurute prabodha–samaye svātmānam evādvayaṁ
tasmai śrī–gurumūrtaye nama idaṁ śrī–dakṣiṇāmūrtaye ‖ 1 ‖

விஷ்வம் தர்ப்பண த்ருஷ்யமான நகரி துல்யம் நிஜாந்தர்கதம்
பஷ்யன்னாத்மனி மாயயா பஹிரிவோத்பூதம் யதா நித்ரயா
ய: சாக்ஷாத்குருதே பிரபோத சமயே ஸ்வாத்மானமேவாத்வயம்
தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நம இதம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே ‖ 1 ‖

**சொற்பொருள் (பதப்பிரிப்பு)**

விஷ்வம் = உலகம்

தர்ப்பண த்ருஷ்யமான நகரி = கண்ணாடியில் தெரியும் நகரம்

துல்யம் = போன்றது

நிஜாந்தர்கதம் = தன்னுள் உள்ளதே

பஷ்யன் = காண்பவன்

ஆத்மனி = ஆத்மாவில்

மாயயா = மாயையால்

பஹிர் இவ உத்பூதம் = வெளியில் தோன்றியது போல

யதா நித்ரயா = கனவு போல

ய: சாக்ஷாத் குருதே = யார் நேரடியாக அனுபவிக்கிறாரோ

பிரபோத சமயே = விழிப்பு (ஞான) நேரத்தில்

ஸ்வாத்மானம் ஏவ அத்வயம் = தன்னையே இரண்டற்றதாக

தஸ்மை = அந்த

ஸ்ரீ குருமூர்த்தயே = குருவின் வடிவத்திற்கு

நம: = வணக்கம்

**ஸ்லோகத்தின் விளக்கம்**

இந்த ஒரு ஸ்லோகம் மட்டும் புரிந்தால் முழு அத்வைதம் புரியும்.

**"உலகம் = கண்ணாடி நகரம்"**

கண்ணாடியில் ஒரு உருவம் தெரிகிறது. அது உண்மையா? என்றால், இல்லை. அதுபோல, இந்த உலகமும் உண்மையானது அல்ல. இந்த உலகம் மனம் எனும் கண்ணாடியில் தோன்றும் பிரதிபலிப்பு.

**"உலகம் உன்னுள் தான் உள்ளது"**

பொதுவாக, நாம் நினைத்துக் கொண்டிருப்பது, இந்த உலகம் வெளியே இருக்கிறது என்பதாக கருதுகிறோம். ஆனால், இந்த ஸ்லோகம் சொல்வது என்னவெனில், உலகம் என்பது உன் சுய அறிவில் உள்ளது என்று கூறுகிறது.

உலகம் = உன் சித்தத்தில் தோன்றுகிறது. வெளியே அல்ல.

**"கனவு உதாரணம்"**

பொதுவாக, நாம் காணும் கனவில், மக்கள், நகரம், அதன் வாயிலாக பல அனுபவங்கள் என எல்லாமே உண்மையாகத் தெரியும். ஆனால், கனவில் இருந்து விழித்ததும், அவைகள் எல்லாம் **"மாயை"** என்று தெரியும். அதுப்போல, இந்த வாழ்க்கையும் வாழும் வரை உண்மையாகத் தெரியும்.

இந்த உலக வாழ்க்கையும் உண்மையல்ல. அந்த கனவு வாழ்க்கைப் போல, பொய்யாக உள்ளது என்பதை உணர வேண்டுமானால், அதற்கு, அவசியம் **"ஞான விழிப்பு"** வர வேண்டும்.

**"ஞான விழிப்பு"**

இது தூக்கத்தில் இருந்து விழித்துக் கொண்டதுப் போன்ற ஒரு சாதாரண விழிப்பு அல்ல. இந்த மனித வாழ்க்கையின் விழிப்பு நிலை அனுபவத்தில் அடைந்த **"ஆத்ம ஞானம்"** ஒன்று மட்டுமே அறியாமைகளை அகற்றி, அந்த தூய

**அறிவுதான் "நான்" என்று நம்மை நமக்குக் காட்டிக் கொடுக்கும் உண்மையான விழிப்பு நிலை ஆகும்.**

**அந்த நிலையில், "நான் மட்டும்தான் இருக்கிறேன்".**

**இந்த உலகம் = தோற்றம் மாத்திரமே என்பது புரியும்.**

बीजस्यान्तरिवाङ्कुरो जगदिदं प्रानिर्विकल्पं पुनः
मायाकल्पितदेशकालकलना वैचित्र्यचित्रीकृतम् ।
मायावीव विजृम्भयत्यपि महायोगीव यः स्वेच्छया
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ २॥

Bījasya antar iva aṅkuro jagad idaṁ prāg nirvikalpam punaḥ
māyā–kalpita–deśa–kāla–kalanā vaicitrya–citrī–kṛtam |
māyāvī iva vijṛmbhayaty api mahā–yogī iva yaḥ svēcchayā
tasmai śrī–gurumūrtaye nama idaṁ śrī–dakṣiṇāmūrtaye ‖ 2 ‖

**பீஜஸ்ய அந்தரிவாங்குரோ ஜகதிதம் பிராக் நிர்விகல்பம் புன:**
**மாயா கல்பித தேச கால கலனா வைசித்ர்ய சித்ரீக்ருதம்**
**மாயாவீவ விஜ்ரும்பயத்யபி மஹா யோகீவ ய: ஸ்வேச்சயா**
**தஸ்மை ஶ்ரீ குருமூர்த்தயே நம இதம் ஶ்ரீ தக்ஷிணாமூர்த்தயே |**

**சொற்பொருள் (பதப்பிரிப்பு)**

**பீஜஸ்ய = விதையின்**

**அந்தர் இவ = உள்ளே இருப்பது போல**

**அங்குர: = முளை**

**ஜகத் இதம் = இந்த உலகம்**

ப்ராக் = முன்பு

நிர்விகல்பம் = வேறுபாடின்றி (ஒருமை நிலையில்)

புன: = பின்னர்

மாயா கல்பித = மாயையால் உருவாக்கப்பட்ட

தேச = இடம்

கால = காலம்

கலனா = கணிப்பு / பிரிவு

வைசித்ர்ய = பல்வகை

சித்ரீக்ருதம் = பல வடிவமாக்கப்பட்டது

மாயாவி இவ = மந்திரவாதி போல

விஜ்ரும்பயதி = வெளிப்படுத்துகிறான்

மஹா யோகி இவ = பெரிய யோகி போல

ஸ்வேச்சயா = தனது சித்தத்தின்படி

## ஸ்லோகத்தின் விளக்கம்

இந்த ஸ்லோகம் மனதினால், இந்த உலகம் எப்படி "உருவாகிறது" என்று விளக்குகிறது.

## "விதை → முளை"

ஒரு விதையை எடுத்துக் கொண்டு, விதைக்குள் மரம் இருக்கிறதா? என்று பார்த்தால், அதை நாம் பார்க்க முடியாது. ஆனால், அந்த விதைக்குள் மட்டுமே மரம் ஒழிந்துக் கொண்டுள்ளது.

அதுபோல, இந்த உலகம் = பிரஹ்மத்தில் உள்ளது.

### "முன்பு – நிர்விகல்பம்"

ஆரம்பத்தில், வேறுபாடுகள் இல்லை. பெயர்கள் இல்லை. வடிவங்கள் இல்லை. ஆனால், அது வெளிப்பட்டவுடன் பெயர், உருவம் என எல்லாம் வந்து விடுகிறது. அதுப்போல, ப்ரஹ்மம் (தூய அறிவு) தன்னை வெளிப்படுத்தியவுடன் இந்த உலகம் பெயர் – வடிவம் கொண்டு காணப்படுகின்றது.

### "பின்னர் – மாயை விளையாட்டு"

உலகம் படைக்கப்பட்டவுடன் இந்த மாயை என்ன செய்கிறது?

மாயை இருமைகளாக எல்லாவற்றையும் பிரிக்கிறது. இது இடம், இது காலம், இது மனிதன், இது உலகம், இது கடவுள் என எல்லாவற்றையும் பிரிக்கின்றது. இப்படி ஒரே ஒரு வஸ்து இருப்பதை மனம் என்ற மாயை பலவாறாகக் காட்டுகின்றது.

### "மந்திரவாதி உவமை"

ஒரு மாயாவி எப்படி தொப்பியில் இருந்து, முயலைக் கொண்டு வந்து காட்டுகின்றானோ? அப்படி இந்த மனம் இல்லாத பலவற்றையும் இருப்பதுப் போல காட்டுகின்றது.

உலகம் = தோற்றம் மட்டும்.

## "மஹா யோகி"

ஒரு மஹா யோகி தன் சித்தத்தினால், எல்லாவற்றையும் சரியாக உருவாக்குகின்றான். அதுப்போல, பிரஹ்மம் எந்த மாற்றமும் இல்லாமல், இந்த உலகமாக தோன்றுகிறது. உலகம் உண்மையாக "உருவாக்கப்படவில்லை". அது, மாயை எனும் மனதினால், தோன்றுகிறது. அதற்குக் காரணம், சித்தம் (Consciousness) எனலாம்.

ஆரம்பம் **(அறிவு)** = ஒருமை

மாயை **(மனம்)** = பல்வகை தோற்றம்.

यस्यैव स्फुरणं सदात्मकमसत्कल्पार्थकं भासते
साक्षात्तत्त्वमसीति वेदवचसा यो बोधयत्याश्रितान् ।
यत्साक्षात्करणाद्भवेन्न पुनरावृत्तिर्भवाम्भोनिधौ
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ३॥

Yasyaiva sphuraṇaṁ sadātmakam asat–kalpārthakaṁ bhāsate
sākṣāt tat tvam asīti veda–vacasā yo bodhayaty āśritān |
yat–sākṣāt–karaṇād bhaven na punar–āvṛttir bhavāmbhonidhau
tasmai śrī–gurumūrtaye nama idaṁ śrī–dakṣiṇāmūrtaye ‖ 3 ‖

யஸ்யைவ ஸ்புரணம் ஸதாத்மகம் அஸத் கல்பார்த்தகம் பாஸதே
சாக்ஷாத் தத் த்வம் அஸீதி வேதவசஸா யோ போதயத்யாஸ்ரிதான்
யத் சாக்ஷாத்கரணாத் பவேன் ந புனராவ்ருத்திர் பவாம்போநிதௌ
தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நம இதம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே ‖

**சொற்பொருள் (பதப்பிரிப்பு)**

யஸ்ய ஏவ ஸ்புரணம் = எதன் பிரகாசம்

ஸத் ஆத்மகம் = உண்மை ஆத்மரூபம்

அஸத் கல்ப அர்த்தகம் = உண்மையல்லாததை உண்மை போல காட்டுவது

சாக்ஷாத் = நேரடியாக

தத் த்வம் அசி = "நீயே அது"

வேத வசஸா = வேத வாக்கியத்தின் மூலம்

போதயதி = உணர்த்துகிறார்

ஆஸ்ரிதான் = அடைந்தவர்களுக்கு

யத் சாக்ஷாத்கரணாத் = அதனை அனுபவித்தால்

ந புன: ஆவ்ருத்தி = மீண்டும் வராது

பவ அம்போநிதௌ = பிறவி என்ற சமுத்திரத்தில்

**ஸ்லோகத்தின் விளக்கம்**

தன்னை அதுவாக உணர்ந்துக் கொண்ட உத்தம சாதகனுக்கு இனி மறுபிறவி என்பது, என்றுமே கிடையாது.

**"तत्त्वमसि"** (Tat Tvam Asi)

நம் எல்லோருக்கும் 'நான் இருக்கின்றேன்!' என்ற **"ஸ்புரணம்"** – உள் பிரகாசம் உள்ளது.

இது உனக்கு எல்லாம் தெரிகிறதா? இதில்தான் எல்லாம் தெரிகிறது. இந்த உலகம், எண்ணங்கள், அனுபவங்கள் என எல்லாமே, உன் உள்ளே இருக்கும் '**சுய அறிவு**' (சித்தம்) காட்டும் சுயம்பிரகாசம்.

அதுவே, அனைத்தையும் பிரகாசமாக்குகிறது

### "அஸத் → ஸத் போல தோன்றுகிறது"

உண்மையில்

**உலகம்** → நிலையற்றது

**உடல்** → மாறுகிறது

**மனம்** → மாறுகிறது.

ஆனால் நாம் என்ன நினைக்கிறோம்?

இது உண்மை என்று நம்புகிறோம். இதுதான் "மாயை".

இதுதான் மனம். இதுதான் எல்லாம்.

### "தத் த்வம் அசி" – நீயே அது

இது உபநிஷத்தின் மகாவாக்கியம்

"அது" – (பிரஹ்மம்)

"நீ" – (ஜீவன்)

இந்த இரண்டும் வேறா?

இல்லை.

ஒன்றே.

**இங்கு குருவின் பங்கு**

குரு என்ன செய்கிறார்?

- ○ குரு யாருக்கும் புதிய அறிவு தரவில்லை.
- ○ ஏற்கனவே இருக்கும் உண்மையை காட்டுகிறார்.
- ○ "நீயே பிரஹ்மம்" என்று காட்டிக் கொடுக்கின்றார்.

**"ஆத்ம சாக்ஷாத்காரம்"**

- ○ இனி அடைவதற்கு ஒன்றுமில்லை.
- ○ அனுவம் வேண்டும் என்று கூட தேவையில்லை.
- ○ எந்த சந்தேகமும் இல்லை.
- ○ எந்த தேடலும் இல்லை.

**"பிறவி முடிவு"**

ஏன் பிறவி வருகிறது?

**"நான் உடல்"** என்ற தவறான எண்ணம் மட்டுமே, மீண்டும், மீண்டும் பிறவியை தருகின்றது. ஆத்ம ஞானம் வந்தால், உடல் நான் அல்ல. மனம் நான் அல்ல, உண்மையில், **நான் = சுத்த சித்தம்** என்பது விளங்கும். அதனால், சித்தம் சிவம் ஆகிய நிலையில் பிறவி இனி இருக்காது.

नानाच्छिद्र घटोदरस्थितमहा दीपप्रभाभास्वरं
ज्ञानं यस्य तु चक्षुरादिकरणद्वारा बहिः स्पन्दते ।
जानामीति तमेव भान्तमनुभात्येतत्समस्तं जगत्
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ४॥

Nānā-chchidra ghaṭodara-sthita-mahā-dīpa-prabhā-bhāsvaram
jñānaṁ yasya tu cakṣur-ādi-karaṇa-dvārā bahiḥ spandate |
jānāmīti tam eva bhāntam anubhāti etat samastaṁ jagat
tasmai śrī-gurumūrtaye nama idaṁ śrī-dakṣiṇāmūrtaye ‖ 4 ‖

நானாச்சித்ர கதோதரஸ்தித மஹா தீப பிரபா பாஸ்வரம்
ஞானம் யஸ்ய து சக்ஷுராதி கரண த்வாரா பஹி: ஸ்பந்ததே
ஜானாமீதி தமேவ பாந்தம் அனுபாத்யேதத் சமஸ்தம் ஜகத்
தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நம இதம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே ‖

**சொற்பொருள் (பதப்பிரிப்பு)**

நானா சித்ர = பல துளைகள்

கடோதர ஸ்தித = குடத்தின் உள்ளே இருக்கும்

மஹா தீப பிரபா = பெரிய விளக்கின் ஒளி

பாஸ்வரம் = பிரகாசம்

ஞானம் = அறிவு

யஸ்ய து = எதன்

சக்ஷு–ஆதி கரண த்வாரா = கண் முதலான கருவிகள் மூலம்

பஹி: ஸ்பந்ததே = வெளியே வெளிப்படுகிறது

ஜானாமி இதி = "நான் அறிகிறேன்"

தம் ஏவ பாந்தம் = அது மட்டும் பிரகாசிக்கிறது

அனுபாதி = அதனால் தான் தெரிகிறது

எதத் சமஸ்தம் ஜகத் = இந்த முழு உலகமும்

**ஸ்லோகத்தின் விளக்கம்**

இந்த ஸ்லோகம் மிக அழகான உவமை கொண்டு, அந்த தூய அறிவு எப்படி, இந்த உலகத்தை வெளிப்படுத்துகிறது என்பதை சொல்கிறது.

**"குடம் – விளக்கு உவமை"**

ஒரு குடம் இருக்கிறது. அந்த குடத்தில் பல துளைகள் இருக்கிறது. அப்படிப்பட்ட குடத்தின் உள்ளே ஒரு எரிகின்ற தீபத்தை வைத்து விட்டால், அந்த தீபப் பிரகாசமானது, அந்த குடத்திலுள்ள பல்வேறு துளைகள் மூலம் வெளியே வருகின்றது. அப்படி வெளியே வந்தவுடன், அதன் பிரகாசமான வெளிச்சத்தின் மூலம், வெளியே உள்ள பொருட்களை எல்லாம் காட்டிக் கொடுக்கிறது.

**குடம்** = உடல்.

**துளைகள்** = புலன்கள் – கண், காது, மூக்கு (இந்திரியங்கள்).

**விளக்கு** = சித்தம் (புத்தி) (Consciousness).

அந்த தீபம் குடத்திலிருந்து வெளியே வராமலேயே, அந்த குடத்திலுள்ள பல்வேறு துளைகள் மூலமாக, அதன் வெளிச்சத்தில் வெளியே இருக்குகின்ற எல்லாவற்றையும் காட்டிக் கொடுக்கின்றதோ?

அதுப்போல, உண்மையில் அந்த தூய அறிவு இந்த உடலில் உள்ள பல்வேறு புலன்கள் மூலமாக, அறிவு வெளிச்சத்தில் எல்லாவற்றையும் காட்டிக் கொடுக்கின்றது.

## "நான் அறிகிறேன்"

பொதுவாக, நாம் நடைமுறையில் சொல்வது, "நான் பார்க்கிறேன்", "நான் கேட்கிறேன்", நான் சுவைக்கிறேன்" என்று கூறுகின்றோம்.

உண்மையில், பார்க்கும் கருவி → **கண்**, அறியும் உண்மை → **சித்தம்**

## "உலகம் எப்படி தெரிகிறது?"

இந்த உலகம் தானாக பிரகாசிக்காது. அது தெரிவதற்கு ஆதாரமாக அந்த அறிவு இருப்பதினால், இங்கு எல்லாம் அந்த அறிவு ஒளி பிரகாசத்தில் பிரகாசிக்கின்றது.

ஆகவே, சித்தம் இல்லாமல், உலகம் இல்லை. உறவுகள் இல்லை. இந்த உலக அனுபவங்கள் எதுவும் இல்லை.

அதனால், உலகம் = **சித்தத்தின் வெளிப்பாடு.**

**விளக்கு** = சித்தம்

**பானை** = உடல்

**பானையில் உள்ள ஓட்டைகள்** = புலன்கள்.

**வெளிச்சம்** = அறிவு

நீ பிரகாசிக்கிறாய் – அதனால் உலகம் தெரிகிறது.

देहं प्राणमपीन्द्रियाण्यपि चलां बुद्धिं च शून्यं विदुः
स्त्रीबालान्धजडोपमास्त्वहमिति भ्रान्ता भृशं वादिनः ।
मायाशक्ति विलास कल्पितमहा व्यामोहसंहारिणे
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ५॥

Dehaṁ prāṇam api indriyāṇy api calāṁ buddhiṁ ca śūnyaṁ viduḥ
strī–bāla–andha–jaḍa–upamās tv aham iti bhrāntā bhṛśaṁ vādinaḥ |
māyā–śakti–vilāsa–kalpita–mahā–vyāmoha–saṁhāriṇe
tasmai śrī–gurumūrtaye nama idaṁ śrī–dakṣiṇāmūrtaye ‖ 5 ‖

**தேஹம் ப்ராணம் அபீந்த்ரியாண்யபி சலாம் புத்திம் ச ஷூன்யம் விது:**
**ஸ்த்ரீ பாலாந்த ஜடோபமாஸ்த்வஹமிதி ப்ராந்தா ப்ருஷம் வாதின:**
**மாயா சக்தி விளாச கல்பித மஹா வ்யாமோஹ சம்ஹாரிணே**
**தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நம இதம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே ||**
\

**சொற்பொருள் (பதப்பிரிப்பு)**

தேஹம் = உடல்

ப்ராணம் = உயிர் சக்தி

இந்திரியாணி = உணர்வு கருவிகள்

சலாம் புத்திம் = அசைவுள்ள மனம்/புத்தி

ஷூன்யம் = வெற்று

விது: = நினைக்கிறார்கள்

அஹம் இதி = "நான்" என்று

ப்ராந்தா: = மயக்கம் அடைந்தவர்கள்

வாதின: = வாதிப்பவர்கள்

ஸ்த்ரீ–பால–அந்த–ஜட உபமா: = அறியாமை கொண்டவர்களைப் போல

மாயா சக்தி = மாயையின் சக்தி

விலாச = விளையாட்டு

வ்யாமோஹ = பெரிய மயக்கம்

ஸம்ஹாரிணே = அழிப்பவர்

## ஸ்லோகத்தின் விளக்கம்

"நான் யார் அல்ல?" என்பதை இந்த ஸ்லோகம் காட்டிக் கொடுகின்றது.

*நம் மனதில் ஏற்றி வைக்கப்பட்ட தவறான அடையாளங்கள்*

"நான் உடல்"

"நான் உயிர்"

"நான் மனம்"

"நான் புத்தி"

"நான் வெற்று"

"நான் மருத்துவன்"

"நான் பிராமணன்"

இவைகள் எல்லாமே தவறு.

ஏன் தவறு?

- ○ உடல் மாறுகிறது
- ○ மனம் மாறுகிறது
- ○ எண்ணங்கள் மாறுகிறது
- ○ படிப்பு மாறுகிறது
- ○ ஜாதி மாறுகிறது

ஆகவே, மாறுவது எதுவும் உண்மை ஆக முடியாது.

ஆனால் "நான்" என்ற எனது சுயம் மாறுகிறதா?

இல்லை!

அதுவே, நீ.

**"ப்ராந்தா:" – மயக்கம்**

இந்த தவறான அடையாளங்கள் எல்லாமே, மனதில் ஏற்றி வைத்துக் கொண்ட பல அறியாமைகள் காரணமாக, இப்படி மயக்கத்தை அல்லது மமதையை உண்டாக்குகிறது.

அதனால், இந்த ஸ்லோகம் சொல்கிறது – இவர்கள் உண்மையை அறியாதவர்கள் என்று எடுத்துக் காட்டுகின்றது.

**"மாயா சக்தி"**

**இந்த மதி மயக்கம் எப்படி வருகிறது?**

**மாயை காரணமாக வருகிறது. அதன் காரணமாக, உடலை "நான்" என்று காட்டுகிறது. மனதை "நான்" என்று எண்ண வைக்கிறது. இதுவே அறியாமை (அவித்யா) ஆகும்.**

**தவறு = "நான் உடல்"**

**உண்மை = "நான் சித்தம்" (தூய உணர்வு).**

राहुग्रस्तदिवाकरेन्दुसदृशो मायासमाच्छादनात्
सन्मात्रः करणोपसंहरणतो योऽभूत्सुषुप्तः पुमान् ।
प्रागस्वाप्समिति प्रबोधसमये यः प्रत्यभिज्ञायते
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ६॥

Rāhu–grasta–divākara–indu–sadṛśo māyā–samācchādanāt
san–mātraḥ karaṇa–upasaṁharaṇato yo'bhūt suṣuptaḥ pumān |
prāg asvāpsam iti prabodha–samaye yaḥ pratyabhijñāyate
tasmai śrī–gurumūrtaye nama idaṁ śrī–dakṣiṇāmūrtaye ‖ 6 ‖

**ராகு கிரஸ்த திவாகரேந்து ஸத்ருஷோ மாயா சமாச்சாதனாத்**
**சன்மாத்ர: கரணோபசம்ஹரணதோ யோ அபூத் சுஷுப்த: புமான்**
**ப்ராக் அஸ்வாப்ஸம் இதி பிரபோத சமயே ய: பிரத்யபிஞ்ஞாயதே**
**தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நம இதம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே ‖**

**சொற்பொருள் (பதப்பிரிப்பு)**

**ராகு கிரஸ்த = ராகுவால் மறைக்கப்பட்ட**

திவாகர = சூரியன்

இந்து = சந்திரன்

ஸத்ருஷ: = போன்றது

மாயா சமாச்சாதனாத் = மாயையால் மூடப்பட்டதால்

சன்மாத்ர: = சுத்த இருப்பு மட்டும்

கரண உபசம்ஹரணத: = கருவிகள் (இந்திரியங்கள்) அடங்கியதால்

சுஷுப்த: = ஆழ்ந்த தூக்கம்

புமான் = மனிதன்

ப்ராக் அஸ்வாப்ஸம் இதி = "நான் தூங்கினேன்"

பிரபோத சமயே = விழித்தபோது

ப்ரத்யபிஞ்ஞாயதே = மீண்டும் அறிகிறான்

## ஸ்லோகத்தின் விளக்கம்

இந்த ஸ்லோகம் ஆழ்ந்த உறக்கம் (சுஷுப்தி) மூலம் ஆத்மாவை நிரூபிக்கிறது.

## "சூரியன் மறைந்தது போல"

சூரிய கிரகணம் வந்தால், சூரியன் மறைந்தது போலத் தெரியும். ஆனால், அது உண்மையில் மறைந்து விடவில்லை. அதுப்போல, ஆத்மா எப்போதும் இருக்கிறது. அதாவது, இந்த மனம் (மாயை) தோன்றி, அறிவை (ஆத்மாவை) மறைக்கிறது.

**"சுஷுப்தி – ஆழ்ந்த தூக்கம்"**

பொதுவாக, நாம் ஒவ்வொருவரும் தூங்கும்போது, கண்கள் வேலை இல்லை. காதுகள் வேலை இல்லை. அதுப்போலவே, மனம் இல்லை. ஆனாலும், நீ இருக்கிறாயா? என்று விசாரித்துப் பார்த்தால், இருக்கிறாய்! என்று தெரிகிறது. இங்கு இதைத்தான் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**"சன்மாத்ர:"**

அந்த நிலையில், நீ உடல் இல்லை. மனம் இல்லை. உன் உலகம் இல்லை. ஆனால், நீ இருந்தது மட்டும் உண்மை. அதுவே, "இருப்பு".

**"நான் தூங்கினேன்"**

பொதுவாக நாம் விழித்ததும் சொல்வது, **"நான் நன்றாக தூங்கினேன்"** என்று சொல்கிறோம். இதன் பொருள், எப்போதும் இருக்கும் நீ இதை அறிகிறாய் என்று அர்த்தம். அதாவது, ஆழ்ந்த உறக்கத்திலும் நீ இருந்தாய்.

இல்லையென்றால், **"நான் நன்றாக தூங்கினேன்"** என்பது, எப்படி உன் நினைவுக்கு வரும்?

**ஆழமான அத்வைத உண்மை**

தூக்கத்தில், நீ = சுத்த ஆத்மா

விழிப்பில் நீ = உடல் என்று நினைக்கிறாய். **இதுவே, அறியாமை.**

बाल्यादिष्वपि जाग्रदादिषु तथा सर्वास्ववस्थास्वपि
व्यावृत्तास्वनुवर्तमानमहमित्यन्तः स्फुरन्तं सदा ।
स्वात्मानं प्रकटीकरोति भजतां यो मुद्रया भद्रया
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ७॥

Bālyādiṣv api jāgradādiṣu tathā sarvāsv avasthāsv api
vyāvṛttāsv anuvartamānam aham ity antaḥ sphurantaṁ sadā |
svātmānaṁ prakaṭīkaroti bhajatāṁ yo mudrayā bhadrayā
tasmai śrī–gurumūrtaye nama idaṁ śrī–dakṣiṇāmūrtaye ‖ 7 ‖

பால்யாதிஷ்வபி ஜாக்ரதாதிஷு ததா சர்வாஸ்வவஸ்தாஸ்வபி
வ்யாவ்ருத்தாஸ்வனுவர்த்தமானம் அஹமித்யந்த: ஸ்புரந்தம் ஸதா
ஸ்வாத்மானம் பிரகடீகரோதி பஜதாம் யோ முத்ரயா பத்ரயா
தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நம இதம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே ‖

**சொற்பொருள் (பதப்பிரிப்பு)**

பால்யாதிஷு = குழந்தை முதலான நிலைகளில்

ஜாக்ரத் ஆதிஷு = விழிப்பு முதலான நிலைகளில்

சர்வாஸு அவஸ்தாஸு = அனைத்து நிலைகளிலும்

வ்யாவ்ருத்தாஸு = மாறிக்கொண்டிருந்தாலும்

அனுவர்த்தமானம் = தொடர்ந்து இருப்பது

அஹம் இதி = "நான்" என்று

அந்த: ஸ்புரந்தம் = உள்ளே பிரகாசிப்பது

ஸதா = எப்போதும்

ஸ்வாத்மானம் = தன்னுடைய ஆத்மாவை

ப்ரகடீகரோதி = வெளிப்படுத்துகிறார்

பஜதாம் = பக்தர்களுக்கு

முத்ரயா பத்ரயா = சின்முத்திரை மூலம்

## ஸ்லோகத்தின் விளக்கம்

"நான்" எப்போதும் மாறவில்லை என்பதை, இந்த ஸ்லோகம் மிக முக்கியமான சான்றுகளுடன் நிரூபிக்கிறது.

## "வயது மாறுகிறது"

குழந்தை → இளைஞன் → முதியவர்

இதனால், உடல் மாறுகிறது. ஆனால், **"நான்"** மாறுகிறேனா? இல்லை! எல்லா வயதிலும், எப்போதும், **"நான்"** என்று சொல்லும் என் **'இருப்பு'** மட்டும் மாறுவதில்லை. ஆனால், இந்த உடல் மட்டுமே **இளமை – முதுமை** என மாற்றம் அடைகின்றது.

## "நிலைகள் மாறுகிறது"

விழிப்பு (ஜாக்ரத்)
கனவு (ஸ்வப்ன)
தூக்கம் (சுஷுப்தி)

இவைகள் எல்லாம் மாறுகிறது. ஆனால், இவைகள் மூன்றிலும் ஆதாரமாக இருக்கும் **"நான்"** மாறுகிறேனா? அல்லது அப்படியே இருக்கிறேனா?

## "அஹம்" – நான் உணர்வு

ஒவ்வொரு நிலையிலும், **"நான் இருக்கிறேன்"** என்ற இந்த உணர்வு இருக்கிறது. அதுதான் ஆத்மா.

## "உள்ளே பிரகாசம்"

ஆத்மா வெளியில் இல்லை. அது, உன் உள்ளுணர்வில் பிரகாசிக்கிறது. அதனால், அதன் மூலம் உண்டாக்கப்பட்ட இந்த உடலுக்கும், மனதிற்கும் எல்லா அனுபவமும் சாத்தியம்.

உடல் மாறுகிறது
மனம் மாறுகிறது
நிலைகள் மாறுகிறது

ஆனால், **"நான்"** என்றும் மாறவில்லை. அதனால், **"நான்"** = நித்தியம்.

மாறுவது = அநாத்மா
மாறாதது = ஆத்மா

நீ = எப்போதும் மாறாத அதே சாட்சி.

विश्वं पश्यति कार्यकारणतया स्वस्वामिसंबन्धतः
शिष्याचार्यतया तथैव पितृपुत्राद्यात्मना भेदतः ।
स्वप्ने जाग्रति वा य एष पुरुषो मायापरिभ्रामितः
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ८॥

Viśvaṁ paśyati kārya–kāraṇatayā sva–svāmi–sambandhataḥ
śiṣya–ācāryatayā tathaiva pitṛ–putrādyātmanā bhedataḥ |
svapne jāgrati vā ya eṣa puruṣo māyā–paribhrāmitaḥ
tasmai śrī–gurumūrtaye nama idaṁ śrī–dakṣiṇāmūrtaye ‖ 8 ‖

**விஷ்வம் பஷ்யதி கார்ய காரணதயா ஸ்வ ஸ்வாமி சம்பந்தத:**
**சிஷ்யாசார்யதயா ததைவ பித்ரு புத்ராத்யாத்மனா பேதத:**
**ஸ்வப்னே ஜாக்ரதி வா ய ஏஷ புருஷோ மாயா பரிப்ராமித:**
**தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நம இதம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே ‖**

**சொற்பொருள் (பதப்பிரிப்பு)**

விஷ்வம் பஷ்யதி = உலகத்தை காண்கிறான்

கார்ய காரணதயா = காரண–காரியம் உறவாக

ஸ்வ ஸ்வாமி சம்பந்தத: = எஜமானன்–உடமை உறவாக

சிஷ்ய–ஆசார்யதயா = சீடன்–ஆசான் உறவாக

பித்ரு–புத்ராதி = தந்தை–மகன் முதலிய

ஆத்மனா பேதத: = தனித்தனியாக வேறுபட்டதாக

ஸ்வப்னே = கனவில்

ஜாக்ரதி வா = விழிப்பில்

புருஷ: = மனிதன்

மாயா பரிப்ராமித: = மாயையால் சுழற்றப்படுபவன்

## ஸ்லோகத்தின் விளக்கம்

இந்த ஸ்லோகம் உலக உறவுகள் எல்லாம் எப்படி தோன்றுகிறது? என்பதை சொல்கிறது.

## "காரணம் – காரியம்"

பொதுவாக, நாம் உலகத்தை எப்படி பார்க்கிறோம்?

இது காரணம்
அது விளைவு

உதாரணம்: – விதை → மரம் – பெற்றோர் → குழந்தை.
ஆனால், இது எல்லாம் மனத்தின் கட்டமைப்பு

## "உறவுகள்"

நாம் நினைப்பது, இது என் வீடு. இது என் மகன். இது என் குரு போன்ற இவைகள் எல்லாம், மனம் உருவாக்கிய அடையாளங்கள் மட்டுமே.

## "பேதம் – வேறுபாடுகள்"

இந்த ஒட்டு மொத்த உலகம் முழுவதும் இருமைகள் நிறைந்த வேறுபாடுகள் மட்டும்தான். அதற்குக் காரணம், மனதில் ஏற்றி வைத்துக் கொண்ட இருமைகள்.

நான் X நீ
இது X அது

ஆனால், இது உண்மையா?

**"கனவு – விழிப்பு"**

கனவில் தோன்றும் உறவுகள் இருக்கிறதா?

அவைகள் உண்மை போல தோன்றுகிறதா?

எதுவரை?

அவைகள் அனைத்தும் உண்மைப்போல தோன்றுவது, கனவு காணும் வரை மட்டுமே. விழித்ததும் அவைகள் அனைத்தும் மாயை. அதுப்போல, இந்த விழிப்பு உலகமும் மனம் இருக்கும் வரை இருக்கும்.

**"மாயை சுழற்சி"**

மனிதன் மனம் என்ற இந்த மாயையால் தொடர்ந்து சுழற்றப்படுகிறான். அதனால், தன் உண்மையை மறந்துவிடுகிறான்.

**ஆழமான அத்வைத உண்மை**

காரணம் இல்லை
உறவுகள் இல்லை
வேறுபாடுகள் இல்லை

இவைகள் எல்லாம் மாயை – தோற்றம் மாத்திரமே.

**உலகம்** = உறவுகள்
**உறவுகள்** = மனம்
**மனம்** = மாயை

**உண்மை** = ஒரே சித்தம் (தூய அறிவு).

भूरम्भांस्यनलोऽनिलोऽम्बरमहर्नाथो हिमांशुः पुमान्
इत्याभाति चराचरात्मकमिदं यस्यैव मूर्त्यष्टकम् ।
नान्यत्किञ्चन विद्यते विमृशतां यस्मात्परस्माद्विभोः
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ९॥

Bhūr ambhāṁsy analaḥ anilaḥ ambaraṁ ahar–nāthaḥ himāṁśuḥ pumān
ity ābhāti carācarātmakam idaṁ yasyaiva mūrty–aṣṭakam |
nānyat kiñcana vidyate vimṛśatāṁ yasmāt parasmād vibhoḥ
tasmai śrī–gurumūrtaye nama idaṁ śrī–dakṣiṇāmūrtaye ‖ ୨ ‖

**பூர் அம்பாம்ஸ்யனலோ அநிலோ அம்பரம் அஹர்நாதோ ஹிமாஞ்ஷு: புமான்**
**இத்யாபாதி சராசராத்மகம் இதம் யஸ்யைவ மூர்த்த்யஷ்டகம்**
**நாந்யத் கிஞ்சன வித்யதே விம்ருஷதாம் யஸ்மாத் பரஸ்மாத் விபோ:**
**தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நம இதம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே ‖**

**சொற்பொருள் (பதப்பிரிப்பு)**

**பூ: = பூமி**

**அம்பாம்ஸி = நீர்**

**அனல: = நெருப்பு**

**அநில: = காற்று**

**அம்பரம் = ஆகாயம்**

**அஹர்நாத: = சூரியன்**

**ஹிமாஞ்ஷு: = சந்திரன்**

**புமான் = ஜீவன் / மனிதன்**

**இவைகள் எல்லாமே, மூர்த்தி அஷ்டகம் = எட்டு வடிவங்கள் ஆகும்.**

சராசராத்மகம் = அசையும் + அசையாத அனைத்தும்

யஸ்ய ஏவ = எதன்

ஆபாதி = தோன்றுகிறது

ந அந்யத் கிஞ்சன = வேறு எதுவும் இல்லை

விம்ருஷதாம் = ஆராய்பவர்களுக்கு

பரஸ்மாத் விபோ: = பரமமான அந்த ஒன்றிலிருந்து

**ஸ்லோகத்தின் விளக்கம்**

"எல்லாம் அதுவே", **"எல்லாம் ஒன்றே!"** என்று கூறும் இந்த ஸ்லோகம் அத்வைதத்தின் உச்சம் ஆகும்.

**"படைப்பின் எட்டு வடிவங்கள்"**

உண்மையில் இந்த உலகம் என்ன?

இந்த உலகம் 8 முக்கிய வடிவங்களால் ஆனது.

அவைகள், (1) பூமி, (2) நீர், (3) நெருப்பு, (4) காற்று, (5) ஆகாயம் என்ற இவைகளுடன், (6) சூரியன், (7) சந்திரன், (8) ஜீவன் என இவைகள் எல்லாம் சேர்ந்து இந்த உலகம் எனப்படும்.

இந்த ஸ்லோகம் இவைகள் எல்லாம் ஒரே பரப்ரஹ்மத்தின் வெளிப்பாடு என்கிறது.

## "சராசரம்"

அசையும் – அசையாத இவைகள் எல்லாம் ஒன்றின் வெளிப்பாடே ஆகும். அந்த ஒன்றை தவிர வேறு எதுவும் இல்லை, ஆராய்ந்தால், எப்போதும் இரண்டில்லை. வேறுபாடுகள் தோன்றுகிறது. ஆனால், அவைகள் எதுவும் உண்மையில் இல்லை. தோற்றம் மட்டுமே.

## ஆழமான அத்வைத உண்மை

உலகம் = ஈஸ்வரன்

ஜீவன் = ஈஸ்வரன்

எல்லாம் = ஈஸ்வரன்

ஆனால், உண்மையில், அது மட்டுமே இருக்கிறது. அதுவே, சுத்த சித்தம்.

பல வடிவங்கள் = தோற்றம்.

ஒரே உண்மை = பிரஹ்மம்.

எல்லாம் அதுவே.

सर्वात्मत्वमिति स्फुटीकृतमिदं यस्मादमुष्मिन् स्तवे
तेनास्य श्रवणात्तदर्थमननाद्ध्यानाच्च सङ्कीर्तनात् ।
सर्वात्मत्वमहाविभूतिसहितं स्यादीश्वरत्वं स्वतः
सिद्ध्येत्तत्पुनरष्टधा परिणतं चैश्वर्यमव्याहतम् ॥ १०॥

Sarvātmatvam iti sphuṭīkṛtam idaṁ yasmād amuṣmin stave
tenāsya śravaṇāt tad–artha–manana–dhyānāc ca saṅkīrtanāt |
sarvātmatva–mahā–vibhūti–sahitaṁ syād īśvaratvaṁ svataḥ
siddhyet tat punar aṣṭadhā pariṇataṁ ca aiśvaryam avyāhatam ‖ 10 ‖

சர்வாத்மத்வமிதி ஸ்புடீக்ருதமிதம் யஸ்மாதமுஷ்மின் ஸ்தவே
தேனாஸ்ய ஸ்ரவணாத் ததர்த்த மனனாத் தியானாச்ச சங்கீர்த்தனாத்
சர்வாத்மத்வ மஹா விபூதி ஸஹிதம் ஸ்யாத் ஈஸ்வரத்வம் ஸ்வத:
சித்த்யேத் தத் புனரஷ்டதா பரிணதம் ச ஐஸ்வர்யம் அவ்யாஹதம் ‖ 10 |

**சொற்பொருள் (பதப்பிரிப்பு)**

சர்வாத்மத்வம் = எல்லாமே ஆத்மா

ஸ்புடீக்ருதம் = தெளிவாக விளக்கப்பட்டது

இது ஸ்தவே = இந்த ஸ்தோத்திரத்தில்

ஸ்ரவணாத் = கேட்பதால்

மனனாத் = சிந்திப்பதால்

தியானாத் = தியானிப்பதால்

சங்கீர்த்தனாத் = ஜபிப்பதால்

ஈஸ்வரத்வம் = ஈஸ்வர நிலை

ஸ்வத: = தானாகவே

அஷ்டதா ஐஸ்வர்யம் = எட்டு விதமான ஐஸ்வர்யங்கள்

அவ்யாஹதம் = தடையில்லாமல்

**ஸ்லோகத்தின் விளக்கம்**

இந்த ஒரு ஸ்லோகம் இந்த ஒட்டு ஸ்தோத்திரத்தின் சாராம்ஸம் மற்றும் அதன் பயன்கள் பற்றி கூறுகிறது.

**"சர்வாத்மத்வம்"**

இந்த ஸ்தோத்திரங்கள் சொல்ல வருவது, எல்லாம் ஒரே ஆத்மா மட்டும்தான்

உலகம் – ஜீவன் – ஈஸ்வரன் எதிலும் வேறுபாடுகள் இல்லை. எல்லாம் ஒன்றே. வேறுபாடுகள் தோன்றுவது மனதினால்தான்.

**"சாதனை மார்க்கம்"**

இதை எளிதாக ஏற்றுக் கொள்ளக்கூடிய சாதனை மார்க்கம் மொத்தம் நான்கு படி நிலைகளில் உள்ளது.

**ஸ்ரவணம்** → கேட்பது

**மனனம்** → சிந்திப்பது

**நிதித்யாஸனம்** → உள்ளே நிலை நிறுத்துவது.

**ஸ்மரணம்** → தன் இருப்பை தான் எப்போதும் உணர்வது.

இதை சாதகர்கள் ஒவ்வொருவரும் தனக்கு கொடுக்கப்பட்ட வாழ்நாளில் சரியாகக் கடைப்பிடித்தால், அவர்களுக்கான ஞானம் உறுதியாகும்.

## "ஈஸ்வர நிலை"

நீயே ஈஸ்வரன்.

அதுவே நீ!

இது அடைய வேண்டியது இல்லை. உணர வேண்டியது.

## "அஷ்ட ஐஸ்வர்யம்"

யோக சித்திகள்:

1. அனிமா
2. லகிமா
3. மகிமா
4. கரிமா
5. ப்ராப்தி
6. ப்ராகாம்ய
7. ஈஷத்வம்
8. வசித்வம்

இவைகள் அடைய வேண்டிய சித்திகள் இல்லை. ஏற்கனவே இருக்கும் ஒன்றுதான். நம்மை நாம் **"ஈஸ்வரன்"** என்று உணர்ந்தால் போதும், இவைகள் எல்லாமே ஈஸ்வர நியதியில், இந்த இயற்கையில் நம்மிடமே பல்வேறு உடல்களில் இருப்பதை உணரலாம்.

உண்மையில், அதுவும் நானே!

இதை அறிவதுதான் ஞானம்

**ஆழமான அத்வைத உண்மை**

சாதனை → மனத்துக்கானது.

ஞானம் → ஆத்மாவுக்கானது.

உண்மையில், நீ ஏற்கனவே முழுமை!

நீயே எல்லாம்.

இதுவே, அபேதம்.

இதுவே, அத்வைதம்.

ஓம் தத் ஸத்!

# தட்சிணாமூர்த்தி ஸ்தோத்ரம்!



ப்ரக்ஞன்